(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

ஆண்டுப்பட்டிகை
பல்வகை
முதன்மைப் பதிவேடு
அமர்வு

CC.No.367/2022

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW–6

| | | |
|---|---|---|
| பெயர் | : | முருகன் |
| த/பெ | : | மகாலிங்க கோனார் |
| கிராமம் | : | திசையன்விளை |
| வட்டம் | : | திசையன்விளை |
| வயது | : | 43 |

**( 1,2 எதிரிகள் ஆஜர்)**

2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது திசையன்விளையில் வசித்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் செய்து வருகிறேன். கடந்த 26.08.2020 அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் திசையன்விளை காவலர்கள் திசையன்விளை வெங்கடேஷ்வரா கேஸ் கம்பெனி அருகே நானும், எனது நண்பர் அசோக் என்பவரும் நின்று கொண்டிருந்த போது அங்கு வந்த போலீசார் வழக்கு சம்பவ இடத்தை டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்வையிட்டு என்னிடமும், அசோக்யிடமும் சாட்சியாக கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகசரில் உள்ள**

**இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** – இல்லை (1,2 எதிரிகள் ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணைக்கு வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை)

(ஒம்.)திரு.மு.ஆனந்த்,பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் (ம)
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
இராதாபுரம்.